DUPLICATE

புதினப் பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

விரோதி ௵ (1889)
ஆவணி மீ ௨௨௳
ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது)
யாழ்ப்பாணப்பட்டினம்: ௵ ௧-க்கு ரூ. ௨-௨௫.
வெளியூர், இந்தியா: ,, ரூ. ௩-௨௫.
தொலைவாய்ப்பகுதி: ,, ரூ. ௩-௭௫.
தனிப்பிரதி சதம் -0௫.

விளம்பர விகிதம்.

		ரூ. ச.
முதன்முறைக்கு:—	ஒருகலம்	௭-௫0.
,,	அரைக்கலம்	௪-00.
,,	கால்கலம்	௨-௫0
,,	ஒரு அங்குலம்	-௫0.

அடுத்தமுறைகட்கு அடியில் விகிதங்களில் குறைவுண்டு

புத்தகம் - ௨௭. { யாழ்ப்பாணம்:—நள ௵ சித்திரைமீ ௨௨௳; ௧௯௧௬ ம்ஆ மேமீ ௪௳. } இலக்கம்—௪௨

௨
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச் சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப் பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர நாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பரம்.

THE CHEAPEST HOUSE FOR HIGH CLASS SILK CLOTHS.

நம்பிக்கையும், நாணயமும், சகாயமுமான பட்டு வர்த்தகசாலை எது?

காசியிற் பிரபல பட்டுவர்த்தகர்களாகிய கே. எஸ். முத்தையா கம்பெனியார்

என்று தெரிந்துகொள்ளுங்கள்.

இங்கு, அநேக நவீன கலர்களிற் புதுமாதிரியான பட்டுப்புடைவைகள், ரவிக்கைக் குட்டைகள், தாவணிகள். பிள்ளை (பஞ்சகாணு) வேட்டிகள், தலைக்குட்டைகள், நார்மடித் தினிசுகள். வெண்பட்டுத் தோத்தி, அங்க வஸ்திரம், சோமன் ஜோடி முதலிய பலவிதமான பட்டாடைகளுஞ் சகாயமான விலைக்குச் சித்தமாக விருக்கின்றன. விபரமான கேட்லாக் விரும்பினுல் இனமாகப் பெற்றுக்கொள்ளலாம். உடனே எழுதுங்கள்.

K. S. Muthiah & Co.,
"Silk House",
BENARES, CITY.

பனைமரங்கள்.

நூறு பனை மரங்களிலிருந்து ௫00 ரூபா பெறுமதியான வரும்படி பெறலாம்.

இது நூறு மரங்களிலிருந்து வரக்கூடிய வரும்படியின் சராசரி மதிப்பு. இது தென்னைகளிலிருந்துவரக்கூடிய வரும்படியிலும் அதிகம். தக்க முயற்சி செய்தால் யாழ்ப்பாணத்திலே இலங்கையின் மற்றெந்தப் பகுதிகளிலும்பார்க்கப் பனைமரங்களிலிருந்து அதிக லாபம் பெறலாம்

இடைவிடாது கள்ளுக் கட்டினல் மரத்துக்குமரம் வித்தியாசமின்றி எந்தமரத்திலும் ஒரேமாதிரியாகக் கள்ளுச் சேர்க்கலாம். முதல் வருஷத்தில் இப்படி இல்லாதிருக்கக்கூடும். ஆனல் இரண்டாம் வருஷத்தில் எந்த மரத்திலும் கள்ளு நல்லாய்ச் சேர்க்கலாம். இரண்டாம் வருஷப் பலனையடைவதற்கு முதலாம்வருஷத்தில் நல்லவேலை செய்ய வேண்டும்.

இரண்டாம்வருஷத்தில் நூறு நாட்களுக்காகுதல் ஒவ்வொரு மரத்திலுமிருந்து ஒவ்வொரு கலன் கள்ளுச் சேர்க்கலாம். ஆகவே நூறு மரங்களிலிருந்து ௧0,000 கலன் கள்ளுச் சேர்க்கலாம்.

ஒவ்வொரு கலன் கள்ளிலிருந்தும் ஒன்றேடு ஐந்திலொரு றாத்தல் பனங்கட்டி செய்யலாம். ஆனல் ஒருறாத்தல் வீதப்படி கணக்கிட்டாலும் ௧0,000 றாத்தல் அல்லது ௨00 கண்டி பனங்கட்டி செய்யலாம்.

குறைந்தபட்சமாக கண்டி ஒன்று ரூபா உடுவீதமாகப்பார்த்தாலும் நூறு மரங்களிலிருந்து ௫00 ரூபா வரும்படி பெறலாம்.

இதைப்பற்றி முழுவிபரங்களு மடங்கியுள்ள பிரபந்தங்களை எங்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—
இலங்கைச் சீனிக் கம்பனியார்,
வல்லுவெட்டித்துறை.

கட்பார்வை.

குளிர்ச்சியான சந்திரகாந்த வில்லைபோட்ட
கண்ணாடிகளைப்பாவித்துப்
பார்வையைக்காப்பாற்றுங்கள்.
திறமான மூக்குக் கண்ணாடிகள்
எங்களிடம்
சகாயவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எம் கல்லிவா அன் சன்ஸ்,
பறங்கித்தெரு,
யாழ்ப்பாணம்

S. U. N. & Co.

Weaving Silk Manufacturers.
BENARES CITY, U. P.

பெரிய கம்பெனி நாணயமான சரக்குகள்

இந்தக் கம்பெனியில் செய்வாகிற உத்தமமான பனாரிஸ் பட்டுச் சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், பஞ்சாணு, காஷ்மீர் போர்வைகள், ருத்திராட்சங்கள், குழந்தைகளின் விளையாட்டுச்சாமான்கள் முதலான அபூர்வமான சாமான்களைப் பற்றிய 68 பக்கமுள்ள ஒரு "காட்லாக்"கும் ஒரு காலபைரவர் படமும் கோருகிறவர்களுக்கு இனமாய் அனுப்பப்படும்.

S.U.N. & Co.
BENARES CITY.
KASHI
VISHWESHWAR

எஸ்.யூ.என். அண்டு கம்பெனி,
பனாரிஸ் ஸிற்றி.

பம்பாய்ச் சேலைகள்.

மிகவும்நாணயமானது! மிகவும்சரசமானது!!
16 முழ நீளம்.



இந்தச் சேலைகள் நேர்த்தியான வெள்ளை மல்லில் மத்தியில் மாங்காய், அன்னம், கிளி, சூரியப் பிறை, சந்திரப் பிறை, நக்ஷத்திரம், புட்டாக்கள்; இவைகள்போல்ஒவ்வொரு சேலைகளிலும் ஒவ்வொருவிதமுண்டு. கரைகளிலும் முந்தானைகளிலும் விசித்திரமான புஷ்பக் கொடிகள் போட்டிருக்கும். இந்தச் சேலைகள் பம்பாயிலிருந்து ஸ்பெஷலாகக் கொஞ்சந்தான் தருவித்திருக்கிறோம். வேண்டியவர்கள் கூடிய சீக்கிரத்தில் தருவித்துக்கொள்ளவும். செட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வி. பி. யில் அனுப்ப முடியாது. சேலை 1-க்கு கிரயம் ரூபா 2, அணா 4.

கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்ட்,
மதராஸ்.

ஆறுமுகநாவலரவர்களால்
அச்சிற்பதிப்பிக்கப்பட்ட
தமிழ்ப்புத்தகங்கள்
வண்ணார்பண்ணைச்
சைவப்பிரகாசவித்தியாசாலையில்
விற்கப்படும்.
V. P. போஸ்டில் அனுப்பவேண்டுவோர்
தபாற்செலவுமாத்திரம் முந்தி அனுப்பல்
வேண்டும்.

விளம்பரம்.

ஒப்பந்தக் கேள்விக் கடுதாசிகள்.
1916–19.

1916-ம் ௵ ஐப்பசி மீ 1௳ தொடக்கம் 1919-ம் ௵ புரட்டாதி மீ 30௳ வரைக்கும் ஒன்று இரண்டு அல்லது மூன்றுவருஷங்களுக்கு பாணந்துறை, வத்துப்பிட்டிவலா, தொலஸ்பாகை, புசலாவை, உடப்புசலாவை, கம்பளை, மத்துறட்டை, மஸ்கேலியா, கெலபொக்கை, நாவலப்பிட்டி ஆகிய இடங்களிலிருக்கும் அரசாட்சியாருடைய ஆஸ்பத்திரிகளுக்குத் தேவையான சாப்பாட்டுச் சாமான்களை ஒப்பந்தமாய்க் கொடுக்கிறதற்கு ஒப்பந்தக் கேள்விக் கடுதாசிகள் 1916-ம் ௵ வைகாசி மீ 16௳ மத்தியானம்வரைக்கும் கொந்திறாத்துவிசாரணைச் சங்கத்தலைவரால் கொழும்பிலிருக்கும் அவருடைய கந்தோரிற் பெற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் வேண்டிய விபரங்களை அரசாட்சியாரது "கசற்" பத்திரிகையிற் பார்த்துக்கொள்ளலாம். அல்லது பிரதான சிவில் மெடிக்கல் ஆபீசருக்கு எழுதியறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

யாழ்ப்பாணம், பழை, வவுனியா, மன்னார் முதலிய பகிரங்கவேலைப் பகுதிகளுக்குத் தேவையான தும்புக் கயிறு, கடகங்கள், சுண்ணாம்பு கரி, ஓடுகள் முதலிய சாமான்களை 1916-ம் ௵ அக்டோபர் மீ 1௳ தொடக்கம் ஒன்று, இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்குக் கொடுப்பதற்கு ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் ஒப்பந்த விசாரணைச் சங்கத் தலைவரால் அரசிறை வருமானத் தலைவர் கந்தோரில் 1916-ம் ௵ மேமீ 9௳ செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணிவரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

இன்னும் தேவையான வேறு விபரங்கள் அரசாட்சியாரது "கசற்" பத்திரிகையிற் காணலாம். அல்லது அந்த மாகாண பிரதான இஞ்சினியருக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

கட்டுகஸ்தோட்டை, மாத்தளை முதலிய பகிரங்கவேலைப்பகுதிகளுக்குத் தேவையான செங்கற்கள், ஓடுகள், சுண்ணாம்பு முதலிய சாமான்களை 1916-ம் ௵ அக்டோபர் மீ 1௳ தொடக்கம் ஒன்று இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்குக் கொடுப்பதற்கு ஒப்பந்தக் கேள்விக் கடுதாசிகள் ஒப்பந்தவிசாரணைச் சங்கத்தலைவரால் அரசிறைவருமானத் தலைவர்கந்தோரில் 1916-ம் வருஷம் மேமீ 9௳ செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் தேவையான வேறு விபரங்கள் அரசாட்சியாரது கசற் பத்திரிகையிற் காணலாம். அல்லது கண்டியிலுள்ள பிரதான இஞ்சினியருக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

நுவரெலி, புசலாவை, டிம்புலா, டிக்கோயா முதலிய பகிரங்கவேலைப்பகுதிகளுக்குத் தேவையான செங்கற்கள், ஓடுகள், சுண்ணாம்பு முதலிய சாமான்களை 1916-ம் ௵ அக்டோபர் மீ 1௳ தொடக்கம் ஒன்று இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்குக் கொடுப்பதற்கு ஒப்பந்தக் கேள்விக் கடுதாசிகள் ஒப்பந்த விசாரணைச் சங்கத் தலைவரால் அரசிறைவருமானத் தலைவர் கந்தோரில் 1916-ம் ௵ மேமீ 9௳ செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் தேவையான வேறு விபரங்கள் அரசாட்சியாரது கசற்பத்திரிகையில் அல்லது நுவரெலியிலுள்ள பிரதான இஞ்சினியரிடம் எழுதி அறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

மட்டக்களப்பு, கல்முனை, திரிகோணமலை முதலிய பகிரங்கவேலைப்பகுதிகளுக்குத் தேவையான கடகங்கள், செங்கற்கள், சுண்ணாம்பு, ஓடுகள் முதலியசாமான்களை 1916-ம் ௵ அக்டோபர் மீ 1௳ தொடக்கம் ஒன்று, இரண்டு, அல்லது மூன்று வருஷங்களுக்குக் கொடுப்பதற்கு ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவரால் அரசிறை வருமானத் தலைவர் கந்தோரில் 1916-ம் ௵ மேமீ 9௳ செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் தேவையான வேறு விபரங்கள் அரசாட்சியாரது கசற்பத்திரிகையிற் காணலாம். அல்லது அந்த மாகாண பிரதான இஞ்சினியரிடம் எழுதி அறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

இந்துஸ்தான் ஐக்கிய விமாச்சங்கம்.

கல்கத்தா இந்துஸ்தான் கட்டடங்களில் இதன் பிரதான ஆபீசு வைத்து நடத்தப்படுகின்றது.

பம்பாய், சென்னை, பஞ்சாப், இலங்கை, தொடுவாயிராச்சியப்பகுதி முதலிய இடங்களில் இதற்குக் கிளைஆபீசுகளுண்டு.

இந்தியாவில் பங்காளிகளுக்கு அதிக லாபத்தைக் கொடுக்கக்கூடிய விமாச் சங்கம் இதுவே.

இந்தியாவில் சனங்களின் சொந்த விமா ஆபீசு இதுவன்றி வேறில்லை.

இதைப்பற்றிய விபரங்கள் பின் சொல்லப்படுபவருக்கெழுதி யறிந்துகொள்ளலாம்.

இலங்கையின் பலபாகங்களில் முகாமைக்காரர் தேவை. விரும்புவோர் அறிவிப்பார்களாக.

M. A. TAMPOE, BROS.,
Chief Agents for Ceylon,
No. 13B, First Cross Street,
COLOMBO.

விளம்பரம்.

1916-ம்௵ அக்டோபர்௴ 1௳ தொடக்கம் ஒன்று இரண்டு அல்லது மூன்று வருஷத்துக்கு வடமாகாணத்தில் முல்லைத்தீவு, மன்னார், பேசாலை என்னுமிடங்களிலுள்ளபகிரங்கவேலைப்பகுதிகளுக்கு ரோட்டுக் கல்லுக் கொடுக்க ஒப்பந்தக் கேள்விகள் ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவரால் அரசிறைவருமானத் தலைவரது கச்சேரியில் 1916-ம்௵ மே௴ 9௳ செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணிவரைக்கும் ஏற்கப்படும்.

இன்னும் தேவையான விபரங்கள் அரசாட்சியாரது “கசற்” பத்திரிகையிற் கண்டுகொள்ளலாம். அல்லது வடமாகாண இஞ்சினீருக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

வதுளை, பசறை, கொஸ்லாந்தை, டியற்றலவா முதலிய பகிரங்கவேலைப்பகுதிகளுக்குத் தேவையான கடகங்கள், செங்கற்கள், ஜன்னற் கண்ணுடிகள், சுண்ணும்பு, ஓடுகள் முதலிய சாமான்களை 1916 ம் ௵ அக்டோபர்௴ 1௳ தொடக்கம் ஒன்று இரண்டு அல்லது மூன்றுவருஷங்களுக்குக் கொடுப்பதற்கு ஒப்பந்தக் கேள்விக் கடதாசிகள் ஒப்பந்த விசாரணைச் சங்கத்தலைவரால் அரசிறைவருமானத் தலைவர் கச்சேரியில் 1916ம் ௵ மே௴ 9௳ செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் தேவையான வேறு விபரங்கள் அரசாட்சியாரது ‘கசற்’ பத்திரிகையில் காணலாம். அல்லது அந்தமாகாண பிரதான இஞ்சினீருக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

பத்திரக்கிரய வரவு.

ஸ்ரீ.	ரூ. ச.
க. தியாகராசக்குருக்கள், நீர்வேலி.	1-90
S. அகிலேசையர், மண்டைதீவு.	1-50
கி. குமாரசாமிஐயர், உருசெல்லை.	2-00
M. சிற்றம்பலம், நாவலப்பிட்டி.	3-25
மா. நாகலிங்கம், சதுமலை.	2-50
S. சின்னத்தம்பி, கொழும்பு.	9-75
V. சின்னக்குட்டி, செம்பியன்பற்று.	3-25
ஆ. மூத்ததம்பிப்பிள்ளை, சாவகச்சேரி.	5-00
கி. சண்முகநாதர், சரவணை.	5-00
ஸ்ரீமதி. சிவப்பிரகாசம்மாள், கொழும்பு.	6-50

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்:-நள௵ சித்திரை௴ ௨௨௳.

சுப்பிரமணியக் கடவுள்—௫.

மலைத் தெய்வம்.

சுப்பிரமணியக்கடவுளது திருவிளையாடல்களுட் குன்றுதொருடலும்ஒன்று. அவருடைய திருப்படை வீடுகள் ஆறும் ஆறு ஆதாரங்களாகவிளங்குவதால், அவற்றுள் இறுதிக்கண்ணதாகிய ஆக்கினையே, படைவீடுகள் இறுதிக்கண் நிற்பதாகிய குன்றுதொருடலாகும். தம்மைத் தியானிக்கும் யோகிகளுடைய ஆக்கினைதானத்தில் தாம் நின்று திருவிளையாட்டயரு முறையை, சண்முகப் பெருமான் குன்றுதொருடலால் விளக்கியருளுவர். இதுபற்றியே அவர் குன்றவாணருக்குக் குலதெய்வமாக விளங்குவதுமாம். குன்றவாணராகிய வேடர்கள் அறிவிற் குறைந்தாராயினும், அழுக்காறு வஞ்சனை முதலிய மனக் குற்றங்களில் நீங்கித் தமக்கு வழிபடு கடவுளாயுள்ள சுப்பிரமணியப் பெருமானிடத்தில் தாம் அறிந்த முறையாக மெய்ப்பத்தி செய்து வழிபடுவாராதலின், அப்பத்திமைக்கெளிவந்து, அப்பெருமான் அவர்களுக்குக் குலதெய்வமாய் விளங்கும் திருவருணீர்மையை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் யார்தான் உடல்கம்பித்து உள்ளம் உருகார்.

“பஞ்சிதனின் மெல்லடி பனிப்பவரையின்பாற், குஞ்சரி நடந்தசெயல் கூறு புது மைத்தோ, செஞ்சுடர்வை வேலுடைய செம்மலடி தீயேன், நெஞ்சக வடுக் கவினு நின்றுலவு மென்ருல்”

என்று சுப்பிரமணிய பத்திபழுத்த கச்சியப்பசிவாசாரியசுவாமிகள் துதித்தாங்கு, இக்கலியுகத்திலே கருங்கன்மனத்தினரேனும் தம்மைத் தியானிப்பர் என்றால் தாம அவருள்ளத்தில் நின்று திருவிளையாட்டயரும திருவருட்சுரப்பை எம்போல்வாருக்கு இனிதுணர்த்தி யருளுமாறு சுப்பிரமணியக்கடவுள் குன்றுதொருடல் செய்வது மாத்திரமன்றி, விடயங்களிற் சென்று பரக்கும் எமது புலன்களைப்போலக் காடுகள் மலைகள்தோறும் அலைந்து திரியும் வேடர்களுக்கும் தாம் குலதெய்வமாகி நிற்றலால், பொறிவழிச் செல்வேமாகிய எமக்கும் தமது திருவருள் வெளிப்பட்டு நிற்கும் தமதுகாருண்ணிய விசிட்டத்தையும எமக்குப் பெரிது விளக்கியருள்வர்.

தான் பெற்ற பிள்ளை அறிவின் விருத்தியடையாமை பற்றித் தாயானவள் அதனைக்கைவிட்டு விடமாட்டாள். ஆனல் அப்பிள்ளையிற்றனே அவள் அத்தியந்த அன்பும் கவனமுமுடையளாய் இருப்பள். அதுபோலச் [illegible] அறிவிற் குறைந்த வனசரர்க்கு அவர்கள் அறிவளவாக வெளிப்பட்டு நின்று அவர்களோடு கொண்டாடுவர். “சிறு பிள்ளைகளை என்னிடத்தில் வரவிடுங்கள்” என்று சிவகாருண்ணியமுடையார் பிறருங் கூறியுள்ளார். இதுபற்றி அங்ஙனம் கூறினரைச் சிறுபிள்ளைகளது விளையாட்டுத்தோழர் என்று சொல்லத் துணிவாரும் சிலர் உளராவரோ? அறியாமையுள்ள சனங்களுக்குச் சுப்பிரமணியக்கடவுள் அவர்கள் அறிவளவாக வெளிப்பட்டுநின்று அருள் செய்வதனல், அவரை அறியாமையில் விளைந்த கடவுள் என்பது, கடவுளது திருவருண் முறையை அறியாமையால் விளைந்த பயன் என்றே நாம் சொல்லத்தக்கது.

இன்னமும் பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயமெனப்படும் பஞ்சபூதங்களுக்கும பிரமா விட்டுணு ருத்திரன் மகேசுரன் சதாசிவம் ஆகிய பஞ்சமூர்த்திகளும் முறையே அதிட்டான தெய்வங்களாய் விளங்குவதுபோல, பூமியின் இயற்கைப் பிரிவுகளாகிய மலை, கடல், காடு, வயல், வனமாகிய ஐவகை நிலங்களுக்கும் ஐந்து மூர்த்திகள் அதிட்டான தெய்வங்களாய் விளங்குவர். இது அந்தந்த நிலங்களில் வியாபித்துள்ள சிவசத்திபேதம் பற்றியாம். இந்தச் சத்திகளின் சூக்குமமாமைப் பௌதிகாந்தகாரத்தில் அமிழ்ந்திக்கிடக்கும் தூலபுத்திகொண்டு காண்பது கூடாது. ஐவகை நிலங்களும் தம்முட் பெரிது பேதப்படுவன என்பது எல்லார்க்கும் உடன்பாடாகலின், இப்பேதத்துக்குக் காரணமாக அங்கங்கே அமைந்துள சூக்கும ஆற்றல்களும் (Spiritual force) தம்முட் பேதமுடையனவாம் என்பது தானேபோதரும். இந்த ஆற்றல்களுக்கெல்லாம்காரணம் சிவசத்தியேயாதலின், ஒவ்வொரு நிலத்திலும் ஒவ்வொரு சிவசத்தி அதிட்டானமுற்று விளங்கும் என்பது நன்குபோந்திடுமாம். இந்தச் சத்திகளுட் குமாரசத்தியே மலைப்பிரதேசங்களை அதிட்டிக்குமாதலால், குமாரக்கடவுள் குறிஞ்சிநிலக்கடவுள் எனப்படுவர்.

மலைப்பிரதேசங்களின் உன்னதநிலையானும அவற்றில் செறிந்துள்ள சுத்தானிலவியாபகத்தானும், அவற்றைத் தேவர் முனிவரெல்லாம் விரும்பி யாங் குறைவர் என்று எமது சமயசாத்திரங்கள் எடுத்துக்கூறும். இதுபற்றியே மலையிடங்களை நிஷ்டைக்குரிய தானங்கள் என்று தபோதனரும் யோகிகளும் அவற்றை நாடிச் செல்வதாம். இங்ஙனம் சிறப்புவாய்ந்தமைபற்றியும் சுப்பிரமணியப்பெருமான் அந்த மலையிடங்களைத் தமக்குத் திருநடத்தானமாகக்கொள்வர் என்க. இக்கருத்துப்பற்றியே

“ஒன்றுதொருடலை யொருவி யாவிமெய்
யொன்றுதொருடலைத் தொடங்கி யைவகை
மன்றுதொருடிய வள்ளல் காமுறக்
குன்றுதொருடிய குமரற் போற்றுவாம்”

என்று கந்தபுராணமும் அவரை எடுத்தேத்திற்று. சிவபாஞ்சுடருக்கு விராட் புருடனுடைய இருதய ஸ்தானமாகிய சிதம்பரமுதலிய தலங்கள் நிருத்தஸ்தானமாக அமைந்தமைபோலச் சுப்பிரமணியக் கடவுளுக்கும் அவ்விராட் புருடனுடைய ஆக்கினைதானங்களாகிய மலை இடங்கள் எல்லாம் நிருத்த ஸ்தானங்களாயின.

இந்த உண்மைகளை எல்லாம் தாம் அறியாராயினும், அறிந்தவரிடத்தாவது கேட்டறியாமல், தத்துவங்கடந்த தனிமுதற்பொருளாகிய சுப்பிரமணியப்பெம்மானை மலைவாசிகள் அநாகரிகமுறையால் அறியாமைபற்றிவணங்கிவந்த கிராமத்தெய்வம்என்று சிறிதாவது வாய்கூசாது வாதிக்கும் பேதைமாந்தருக்கு நாம் யாது சொல்லத்தக்கது!

சுப்பிரமணிய வணக்கம் வேடர்களிடத்து மாத்திரம் காணப்படுவதாயின் அதனை வேடவணக்கம் என்று ஒருகாற் கூறினும் கூறலாம். இந்த வேடவணக்கம் உற்பத்தியாதற்குப் பல நெடுங்காலத்துக்கு முற்றொட்டுக் குமரப் பெருமானைத் தேவர்களும் முனிவர்களும் ஞானிகளும் பிறரும் வணங்கிவந்திருப்பது எங்கள் புராதன சாத்திரங்களால் இனிது நாட்டப்பட்டுக்கிடக்கும்போது, அவ்வணக்கத்தை வேடவணக்கம் என்று எடுத்துக் கூறுவது எத்துணைப் பேதைமையாகும்? கிறிஸ்துவை வணங்கும் வணக்கம் வலைஞமாக்களுட்டானே பெரிது காணப்படுதல் பற்றி, அவ்வணக்கத்தை வலைஞவணக்கம் என்று நாம் எடுத்துக் காட்டினுல் அதனைக் கிறிஸ்தவர் ஒப்பி உடன்படுவர் கொல்லோ? கிறிஸ்துவைவணங்கும் வணக்கத்தை வலைஞவணக்கம் என்று கொள்வது ஒருவாறு ஏற்புடைத்தாயினும் ஆகலாம், என்னை? தொடக்கத்திலே கிறிஸ்து வலைஞமாக்களுக்கே போதித்தார் என்றும், அந்த வலைஞர் தாமே அவருக்குச் சிஷ்யராய் வெளிப்பட்டு அவருடைய சமயத்தைப் போதிக்க ஆரம்பித்தார்கள் என்றும் கிறிஸ்துசமய நூல்கள்தாமே எடுத்துக்காட்டுமாதலினென்க. ஆனல் ஆதியில் சுப்பிரமணியவணக்கம் வேடர்களுட்டானே முளைத்ததென்றுவது, வேடர்கள் தாமே அவ்வணக்கத்தை உலகத்திற் பரப்பினுரென்றுவது காட்டுதற்கு யாதாயினும் ஓர் ஆதாரமில்லையாக, அவருடைய வணக்கதனை வேட வணக்கம் என்பது எங்ஙனம் பொருந்தும்? சுப்பிரமணியவணக்கம் வேடவணக்கம் என்பதற்கு யாதொரு ஆதாரம் இல்லாதொழிதன்மாத்திரமன்றி, அஃதோர் வேதவணக்கம் என்புதையும், அவ்வணக்கம்தேவர்கள் முனிவர்களுக்குரியதோர் உயர்தர வணக்கம் என்பதையும், அதனகத்தே அநேகாநேக தத்துவார்த்தங்கள் பொதியப்பெற்றுள என்பதையும் வெளிப்படையாக எடுத்துக்காட்டும் பல பூர்வ ஆதாரங்கள் இருக்கும்போது, அந்த ஆதாரங்களை எல்லாம் நிஷேத்துவிட்டு, தமது மனத்தே குடிகொண்ட மாற்சரியம் காரணமாக அவ்வணக்கத்தை வேடவணக்கம் என்று தூஷிக்கத் தலைப்பட்டுநிற்கும் சில கற்பனுசமயக் குருமாரது மௌட்டிகத்தைக் குறித்து நாம் யாது சொல்வோம்?

வேடர்கள் சுப்பிரமணியக் கடவுளை வணங்கிவந்த வணக்கத்திற்றனும் அவ்வணக்கத்தின் பூர்வ உயர்தர நிலையைக் காட்டுதற்குரிய பல வழக்கங்கள் அமைந்து கிடத்தலை, அவ்வேடர் அப்பெருமானுக்கு இட்டழைத்த பெயர்க் காரணங்களை ஆராயுமிடத்து விளக்கிக்காட்டுதும்.

சமாச்சாரம்.

காலநிலை:—மழை இடையிடையே சிறுகப் பெய்தது. ஆயினும் வெப்பம் தணியவில்லை. தென்றல்காற்று வீசுகின்றது.

ஏசன்றரவர்கள்:—வடமாகாண ஏசன்றர் மெஸ். ஹோர்ஸ்பேர்க் அவர்கள் இந்த௴ ௨௳ வன்னிப்பகுதிக்குச் சற்ரேட்டத்திற் செல்வர்.

மணியகாரன்மார் கூட்டம்:—யாழ்ப்பாணம் மணியகாரன்மார் முறைக்குமுறை கூடித்தங்கள் உத்தியோக கடமைகளோடு சம்பந்தமான விஷயங்களை ஆலோசித்தல்வழக்கம். இவர்களது கூட்டமொன்று சிலநாட்களின்முன் மாகாலில் வலிகாமம் மேற்கு மணியகாரன் மெஸ் சந்திரசேகரமவர்களின் கிருகத்தில் நடத்தப்பட்டது. அப்போது யாழ்ப்பாணம் மணியகாரன்மார் மாத்திரமன்று வேறுசில பிரபுக்களும் சமுகமளித்திருந்தனர்.

காரைதீவு மேற்கு சுப்பிரமணியசுவாமிகோயில்:—இங்கே வருகிற திங்கட்கிழமை துவஜாரோகணமாகி வைகாசி௴ 3௳ ரதோற்சவமும் 4௳ பூரணையன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

டக்தர் நல்லம்மா:—இணுவில் ஆஸ்பத்திரியிற் பலவருடங்களாக ஓர் டக்தராயிருந்து அரிய வைத்தியஞ் செய்துவந்த டக்தர் நல்லம்மா இப்போது இல்லாச்சிரமத்திற்புகும் நோக்கங்கொண்டிருக்கின்றமையால் தமது வேலையினின்றும் விலகிக்கொள்ளும் கருத்துடையவராயிருக்கின்றனரெனத் தெரியவருகின்றது.

வைத்தியங் கற்றுத் தேறிய ஓர் தமிழ்மாது:—யாழ்ப்பாணம் றெவெறெண்ட். ஜோன் ஹென்ஸ்மனவர்களின் பௌத்திரியும் றெவெறண்ட் வீரசிங்க என்பவரின் புத்திரியுமாகிய மிஸ் லூசியா வீரசிங்க என்னும் மாது சென்னை வைத்தியகல்லூரியில் வைத்தியங்கற்று எம். பீ. சி. எம். பட்டம் பெற்றிருக்கின்றனர்.

விவாகம்:—உதவி வித்தியாதரிசி ஸ்ரீ. பொன்னையா அவர்களின் சகோதரன், பிறக்தர் ஸ்ரீ. அப்பாத்துரையவர்களுக்கும், யாழ்ப்பாணம் பகிரங்கவேலைப்பகுதித்தலைமைக்கிளாக்காகவிருந்து இளைப்பாறியிருக்கும் ஸ்ரீ. சுவாமிநாதரவர்களின் இரண்டாம் புத்திரி மாது ஸ்ரீ. வள்ளிநாயகிக்கும் சென்ற சனிவாரத்தன்று பத்துமணியளவில் நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விவாகம் வெகுசிறப்பாய் நடைபெற்றது. மூன்றுநாட்களாக நடைபெற்ற இவ்விவாகோற்சவத்திற்குப் பல பிரபுக்கள் பல திசைகளிலுமிருந்துசென்று கொண்டாடித்திரும்பினர். மணமகனும மணமகளும் அட்டஐஸ்வரியங்களும்பெற்று நீடூழிவாழச சிவபிரான் திருவருள் புரிவாராக.

—யாழ்ப்பாணம் கச்சேரித் தலைமைக் கிளாக் ஸ்ரீ. நிக்கலஸ் முதலியாரவர்களின் சிரேஷ்ட புத்திரனும், மதுபரிபாலனபகுதியில் உதவிச் சுப்பெறின்றனுக விருப்பவருமாகிய ஸ்ரீ. நீ. செல்வத்துரை அவர்களுக்கும், மானிப்பாய் ஸ்ரீ. இராமநாதன் பொன்னுச்சுவாமி யவர்களின் புத்திரிக்கும் சென்ற ஏப்பிறில்௴ ௨௮௳ வடமாகாண ஏசன்றர் மெஸ். ஹோர்ஸ்பேர்க் அவர்கள், கௌரவ ஸ்ரீ. அ. கனகசபையவர்கள் முதலிய பலரதுசமுகத்தில் விவாகப்பதிவுநடைபெற்றது. விவாகம் சைவசமய விதிப்படி விரைவில் நடைபெறும்

சட்ட நிருபண சபை:—இலங்கைச் சட்டநிருபணசபை வருகிற ஜூன்௴ ௭௳ ஆரம்பமாகும்.

சிலாபம் புகைரதப்பாதை:—சிலாபம் புகைரதப்பாதை இந்த மே௴ ௧௳ நமது தேசாதிபதி சேர். ஜோன். அண்டேர்சனவர்களால் திறக்கப்பட்டது.

நெற்செய்கை:—நீர்ப்பாய்ச்சற் குளங்களுக்கணித்தாயுள்ள நிலங்களைநெற்செய்கைக்குள்ளாக்குவதைக்குறித்து அதிகாரிசனையெடுத்திருக்கும் கௌரவ ஸ்ரீ பாலசிங்கமவர்கள் பட்டக்கிளப்பிலுள்ள நீர்ப்பாய்ச்சற் குளங்களையும் அவற்றிற்கணித்தாயுள்ள நிலங்களையும் பார்வையிடும்பொருட்டு அங்குசென்றிருக்கின்றனர்.

ஓர் புகைரதக் காவலன்’ புகைரதத்திலிருந்து விழுந்தது:—மன்னருக்கும் மதவாசசிக்குமிடையில ஓடும் புகைரதத்திலிருந்து ஓர்’காவலன்’ தற்செயலாய்விழுந்துவிடப் புகைரதம் ஓடிவிட்டது. இவர் சிறிது காயமடைந்தனராயினும் எழுந்து ஐந்து கட்டைக்கு நடந்துசென்றபின் ஓர் தள்ளுவண்டியிலேறி மன்னருக்குச் சென்றனர்.

ஒறியென்ற்லயின் கம்பனியாரின் கப்பல்கள்:—கொழும்புக்கு வந்துகொண்டிருந்த ‘ஒறியன்றலயின்’ கம்பனியாரின் கப்பல்கள் இனிக் கொழும்புக்கு வராது நன்னம்பிக்கைமுனை வழியாக அவுஸ்திரேலியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையில் ஓடித்திரியுமாம். மத்தித்தரைக்கடலில் நிற்கும் சப்மெறயின் கப்பல்களுக்குப் பயந்தல்லக் கொழும்பிலே கரி பெற்றுக்கொள்ளுதல் கூடாததினுலேயே இக்கம்பனியார் தங்களகப்பல்களைக் கொழும்புக்கனுப்பாது விடப்போகின்றுர்களாம்.

தேசாதிபதியவர்கள் கண்டிக்குத் தரிசனமளித்தல்:—தேசாதிபதி சேர். ஜோன் அண்டேர்சனவர்கள் இந்த மே௴ ௧௧௳ கண்டிக்குத் தரிசனமளிப்பா. இவர் கண்டிக்குப் போகும்போது தலைமை உத்தியோகஸ்தர்களும் ஊர்ப் பிரபுக்களும்ஓர்பக்தரின்கீழ் அவரை உபசரிப்பர். இங்கே கண்டி நகரசங்கத்தார் ஓர் உபசாரப்பத்திரம் வாசித்தபின், குடை கொடி ஆலவட்டம் யானைகள் முதலிய சிறப்புகளுடன் அவர் கண்டிமாளிகைக்கழைத்துக்கொண்டுபோகப்படுவர். பின்னர் கண்டிப் பிரதானிகளவருக்கோர் உபசாரப்பத்திரம் வாசிப்பார்கள்.

மண்டபத்தில் வைசூரி:—கொழும்பிலிருந்து புகைரதமார்க்கமாக இந்தியாவுக்குச்சென்ற ஓர் தோட்டக் கூலிக்காரன் வைசூரி நோயாற் பீடிக்கப்பட்டு மண்டபத்தில் மறிக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்கனுப்பப்பட்டான்.

ஓர் ஜப்பான் கப்பல் கடலிலமிழ்ந்தியது:—சிங்கப்பூரிலிருந்து சென்ற டிசெம்பர் மாசத்தில் ஐரோப்பாவுக்குப் பயணமான “கொக்கொற்றுமாறு”என்னும் ஜப்பான் கப்பல் இந்துசமுத்திரத்தில் புயலிலகப்பட்டு மோசம்போய்விட்டதெனச் சொல்லப்படுகின்றது.

லெவ்றினன் பிறீமனவர்கள்:—வடமாகாண ஏசன்றாயிருந்த மெஸ். பிறீமனவர்களின் ஏக புத்திரன் லெவ்றினன் பிறீமனவர்கள் இப்போது ஓர் “கப்டினு” உயர்த்தப்பட்டிருக்கின்றனர். இவர் யுத்தத்தில் காயமடைந்து இப்போது சுகமடைந்து பின்னரும் யுத்தமுனையில் நின்று யுத்தஞ் செய்கின்றனர்.

புத்தக வரவு.

நளன்:—இஃது நளவெண்பா, நைடதம் என்னும் இந்நூல்களை ஆதாரமாகக்கொண்டு வாழ்குடை ஸ்ரீ. பி. வெங்கடராம சாஸ்திரியவர்களாற் கத்தியரூபமாக எழுதப்பெற்ற ஓர் சிறந்த நூல். வசனநடை அற்ப தமிழ்க்கல்வியுடைய ஆண்களும் பெண்களும் இலகுவிற் கற்றுணரக்கூடிய தன்மையது. வேண்டியவேண்டிய இடங்

களில் நளவெண்பா, நைடதம் ஆதிய நூலகத்துள்ள செய்யுட்களும் எடுத்தாளப்பட்டுள்ளன. அச்செய்யுட்களின் அர்த்தம் அவ்வப்பக்கங்களின் அடியில் எழுதப்பட்டுள்ளன. காமசிருங்கார வர்ணனை யாவும் இந்நூலின்கண் தவிர்க்கப்பட்டன. சூதினால்வருந்தீமை, கற்பின் மகத்துவம், புத்திரப்பேறு, இராத்தலால்வருமிழிவு, முதலிய இன்னோரன்ன பலவிஷயங்கள் நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. சரித்திரசம்பந்தமான அழகிய படங்கள் இடையிடையே பெய்யப் பெற்றுள்ளன. பிரதி ஒன்றின் விலை அணா 2.

ஸ்ரீ ராமன்:—இந்நூலும் மேற்படி சாஸ்திரியாரவர்களால் இனிய தமிழ் வசனநடையில் எழுதப்பெற்றுள்ளது. கம்பராமாயணத்துள்ள ஆறு காண்டங்கட்கும் முறையே இளமை, கடமை, விரதம், நட்பு, தூது, சண்டை எனப் பெயரிட்டு அவ்வவ்விஷயங்களை நன்கு விளக்கி எழுதப்பட்டுள்ளது. கம்பராமாயணச் செய்யுட்களும் சில உரையுடன் ஆங்காங்கு பெய்யப்பெற்றுள்ளன. இச்சிறுபுத்தகமும் முற்கூறிய 'நளன்' என்னும் நூல்போல் பாடசாலை வித்தியார்த்திகளாலும் ஏனைய ஆண் பெண் மக்களாலும் இனிது படித்துப் பயன் எய்தற்பாலது. இதன்கிரயம் அணா 4.

இந்து புண்ணிய கதைகள்:—இது சிவன், தேவி, விநாயகர், சுப்பிரமணியர், விஷ்ணு ஆதியோர்க்குரிய விரதங்களின் வரலாற்றையும், அவற்றை அனுஷ்டிக்கவேண்டிய முறையையும், அனுஷ்டித்தோர் எய்திய பலனையும், இன்னும் பல அரிய விஷயங்களையும் நன்கு எடுத்துக் கூறும் ஓர் அரிய தமிழ் வசனநூல். விஷயங்கள் பெரும்பான்மையும் பல புராணங்களிலும் இதிகாசங்களிலும் பிறசாஸ்திரங்களிலுமிருந்து தொகுக்கப்பட்டுள்ளன. படிப்போருள்ளத்தில் பத்தியை வளர்க்கக்கூடிய பல அழகிய சித்திரப் படங்கள் ஆண்டாண்டுச் சேர்க்கப்பட்டுள்ளன. சுருக்கச்சொல்லுமிடத்துக் கருப்பஞ்சாற்றைக் காய்ச்சிச் சருக்கரையாகத் திரட்டியமையை நிகர்க்கும் இந்நூலின்மாண்பு. பெரும்பிரயாசையெடுத்து லோகோபகாரமாக இந்நூலை இயற்றியவர் ஸ்ரீ பி. வீ. ஜெகதீச ஐயரவர்கள். நீதிபதி ஸ்ரீ. ரீ. வீ. சேஷகிரி ஐயரவர்கள் இதற்கு ஓர் அங்கிலமுகவுரை எழுதியிருக்கின்றனர். சைவ வைஷ்ணவ விரதசம்பந்தமான எவ்விஷயமும் இச்சிறுநூல் வாயிலாக எளிதிற் படிக்கற்பாலன. இதன் விலை அணா 8.

இந்து பாக சாஸ்திரம்:—இதுவும் மேற்படி ஜெகதீச ஐயரவர்களால் தமிழ் வசனநடையில் இயற்றப்பட்ட ஓர் அரிய நூல். இதற்கு சேர் எஸ். சுப்பிரமணிய ஐயர் எல். எல். டி. அவர்கள் நான்முகம் உதவியுள்ளனர். இது உணவுக்காகிய பதார்த்தங்களின் குணத்தையும், அவற்றைப் பாகஞ்செய்யும் முறையையும், ஜலத்தின் பேதங்களையும், இன்னோரன்ன பிற அரிய விஷயங்களையும் தெள்ளிதில் எடுத்துக் கூறும் ஓர் சிறந்த தமிழ் வசனநூல். இது நமது பெண்மணிகள் ஒவ்வொருவர் கையிலும் அவசியகம் இருக்கவேண்டியது. ஓர்மலையைத் தன்னகத்துப் பிரதிவிம்பித்துக் காட்டும் ஸ்படிகம் போன்றது இந்நூலினியல்பு. இடங்கடோறும் பாகசம்பந்தமான சித்திரங்களுள்ளன. பிரதியொன்றன்விலை அணா6.

நல்வழி, ஆத்திசூடி:—தெய்வப்புலமை ஔவைப்பிராட்டி இயற்றிய இவ்விரு நூலும் சிறந்த பதவுரை கருத்துரையுடன் தனித்தனியே அச்சிடப்பட்டுள்ளன. உரைகள் பெரும்பான்மையும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் இந்நூல்கட்கு முன்னர்ச்செய்த உரைகளைத் தழுவியெழுதப்பட்டுள்ளன. தமிழச் சிறுவர் சிறுமியர்கட்கு இந்நூல்கள் பெரிதும் பிரயோசனமுடையன. தனித்தனி பிரதிகளின் விலை அரையணா.

ஷை நூல்கள் சென்னை ஆர். வேங்கடேஸ்வரகம்பெனியாரால் ஆனந்த அச்சியந்திரசாலையில் பளபளப்பான காகிதத்தில் முத்துப்போன்ற அக்ஷரங்களால் நன்கு அச்சிட்டு அழகுறக்கட்டப்பட்டிருக்கின்றன. பிரதிகள் குறித்தகிரயத்திற்கு மேற்படி கொம்பெனியாரிடம் பெறற்பாலன. எமக்கனுப்பிய பிரதிகளை நன்றியறிதலுடன் ஏற்று உவந்தாம்.

தந்திச் சமாச்சாரம்.

(யுத்தசங்கதிகள்)

ஏப்பிரல்௴ 25௳.

குறுயிசர்க்கப்பல்களையும், டிஸ்திரோயர்க்கப்பல்களையும் கொண்ட ஜர்மனிய கப்பற்படை லௌவ்ஸ்ரத் என்னுமிடத்துக்கு அணித்தாகக் காணப்பட்டது. 20 நிமிஷங்களால் அவை ஆங்கில கப்பற்படையாற் றுரத்தப்பட்டு ஜர்மனிக்கு மீண்டன. கரையில் 2 ஆண்களும் 1 பெண்ணும் 1 குழந்தையும் கொல்லப்பட்டனர். வேறும் அற்ப சேதமுண்டு. இரு ஆங்கில குறுயிசர்க் கப்பல்கள்மீதும் ஒரு டிஸ்திரோயர்க் கப்பல்மீதும் சிலகுண்டுகள் பட்டன. அவற்றால் உயிர்ச்சேதமில்லை. இங்கிலாந்தின் கீழ்க்கரையிற் பயங்கரமான குண்டுப்பிரயோகம் நடக்கின்றது. பல கடலுள் விழக் காணப்பட்டன.

மியூசுக்குமேற்கிற் பிரான்சியர் ஜர்மனியரைத் தோல்வியுறச் செய்தார்கள். ஜர்மனியர் இருமுறை டெற்மன் குன்றில் பிரான்சியர் புதிதாகப் பிடித்த இடத்தை திருப்பிப் பிடிக்க முயன்று பிரதிகூலமடைந்தனர். பின்னர் நச்சுத்தூமத்தின் உதவியைக்கொண்டு தாக்கினர். அப்பொழுது பிரான்சிய பீரங்கிகளுக்கு ஆற்றுதவராய் ஜர்மனியர் வென்னிட்டனர்.

அவக்கோர்ட்டிற் கடும் யுத்தம் நடக்கின்றது. ஜர்மனியர் முன்னேறிச்செல்ல முயன்றபோது ஆங்கில பிரான்சியராற் றுரத்தப்பட்டனர்.

லொரேனில் ஓர் ஜர்மனிய சைநியம் பிரான்சியராற் சிதறச்செய்யப்பட்டது. டன்கேர்க்கில் ஓர் ஜர்மனிய ஆகாயரதம் குண்டுகளைப்பெய்தது. இதனால் ஒருத்தி மாண்டாள். இரு ஆடவர் காயமுற்றனர். வேறு பெருஞ் சேதமில்லை.

எல்கத்தாரா என்னுமிடத்துக் கணித்தாயுள்ள சுதியாவில் கடும்யுத்தம் நடக்கின்றதுபோற் காணப்படுகின்றது. பகைவர் சேனையில் ஏறக்குறைய 500 பேர்வரையில் டியூடார் என்னுமிடத்தில் கூடி ஆங்கிலேயருக்குரிய ஸ்தானத்தைத் தாக்கினர். ஆனால் ஆங்கிலேயருக்குத் துணைச்சேனை வந்தபின்னர் பகைவர் அபஜய மடைந்தனர். அவர்களில் 30 பேர் கைதிகளாக்கப்பட்டனர். 40 பேர் மாண்டனர்.

(பிந்தியசமாசாரம்). சுதியாவில் முன்னர் கூறியதிலும்பார்க்கக் கடும்யுத்தம் நடப்பதாகச்சொல்லப்படுகின்றது பகைவரில் 70பேர் மாண்டனர். பலர் கைதிகளாக்கப்பட்டனர். யுத்தத்திற்குரிய பொருட்கள் பலபிடிக்கப்பட்டன. 8ஆகாயரதங்கள் அங்குச்சென்று துருக்கியசேனைகளிருக்குங் கூடாரங்கள்மீது வெடிகுண்டுகளைப் பெய்து அதிக சேதம் விளைத்தன. இப்பொழுது துருக்கியர் சுதியாவைவிட்டு விலகுகின்றனர்போற் காணப்படுகின்றது.

ப்றிசெயின், ரோஸ் என்னும் இரு அங்கில கப்பல்கள் கடலுள் அமிழ்த்தப்பட்டன. ரோஸ் என்னுங் கப்பலிலிருந்த 11 பேர் மீட்கப்பட்டனர்.

ஏப்பிரல்௴ 26௳.

மறியாக்கேர்க்கென்னுமிடத்தில் ஆங்கில ஆகாயரதங்கள் பெல்ஜிய ஆகாயரதங்களின் துணைக்கொண்டு ஜர்மனியரதங்களைத் தாக்கின சென்ற ஞாயிறு திங்கட்கிழமைகளிற் பெரும் வெடிகுண்டுகளைப் பெய்துவிட்டு சேதம் யாதுமின்றி மீண்டன. ஒரு ஆங்கில ஆகாயரதம் சென்ற திங்கட்கிழமை ஓர் ஜர்மனிய சீப்பிளேன் கப்பலைத் தாக்கி அதைக் கடலில் ஆழ்த்தியது.

ஜர்மனியஆகாயரதங்கள் இங்கிலாந்தின் கீழ்க்கரையிற் சென்று வெடிகுண்டுகளைப் பெய்தபோது ஆங்கில ரதங்கள் அவற்றைத் துரத்து சென்று ஜர்மனிய கப்பற்படைகள்மீது குண்டுகளைப் பெய்தன. ஒரு ஆகாயகமனி காயமுற்று மீண்டுவந்தான். வேறொருவனைக் காணவில்லை.

விறிக்கோட், செனச்சஸ் என்னுமிடங்களில் பகைவர் வெடிகுண்டுகளைப் புதைத்தனர். அதனால் யாதும் சேதம் நேர்ந்திலது. சோமூர்க்கு வடக்கே பகைவருக்குரிய ஸ்தானங்களை ஆங்கிலேயர் தாக்கினர். செனச்சஸ் லாபாசி வாய்க்காலுக்கிடையில் குண்டுப்பிரயோகம் நிகழ்கின்றது. நேற்று 29 ஆகாயரத யுத்தம் நடந்தது. பகைவருக்குரிய 2 ஆகாய ரதங்கள் அவர்கள் சேனை நிற்குமிடத்தில் வீழ்ந்தன. அங்கில ரதமனைத்தும் யாதுஞ் சேதமின்றி மீண்டன.

அசினுக்கு வடக்கே பிரான்சியர் ஓர் சிறுக்காட்டைப் பிடித்தனர். அரோக்கனுக்கு வடக்கே பகைவருக்குரிய ஓர் ஸ்தானத்தைப் பிரான்சியர் பிடித்தனர். 285-ம் மலையில் ஜர்மனியர் ஓர் வெடி சுரங்கத்தை வெடிக்கச் செய்தனர். 304-ம் குன்றில் கடும் குண்டுப்பிரயோகம் நடந்தது. லோரேனில் ஜர்மனியர் கடிது தாக்கியபோது துரத்தப்பட்டனர். பகைவருக்குரிய4ஆகாய ரதங்கள் கீழே கொண்டுவரப்பட்டன. ஒரு பிரான்சிய ஆகாயரதம் கொன்விளாஸ் புகைரதஸ்தானத்தின்மீது குண்டுகளைப்பெய்தது. பகைவருடைய ஆகாயக் கப்பல்கள் சென்று எசெக்ஸ என்னுமிடங்களில் வெடிகுண்டுகளைப் பெய்தன எத்தனை கப்பல்என்பது நன்றாய்த்தெரியவில்லை நான்கென எண்ணப்படுகின்றது. அவைகள் துரத்தப்பட்டன.

இங்கிலாந்திற் குண்டுகளைப் பெய்யும்படி சென்ற ஜாமனிய ஆகாயரதங்கள் ஆங்கில கப்பல்களாலும் ஆகாயரதங்களாலும் தாக்கப்பட்டபோது ஓட்டம்பிடித்தன. அவைகள் பல வெடிகுண்டுகளைப் பெய்துகொண்டு சென்றனவேனும் அவற்றால் யாதும் தீமையுறவில்லை. ஆங்கில ஆகாயரதங்கள் லோஸ்றவுத் என்னுமிடத்துக்கணித்தாய் நின்ற ஜர்மனிய கப்பல்களைத் தாக்கின ஒருஆங்கிலரதம் பகைவருடைய கப்பலால் அதிகஞ் சேதமடைந்தது. அந்த ஆகாயகமனி கடுங்காயமுற்றானாயினும் ரதத்தைப் பதனமாக மீட்டுக்கொண்டு வந்தனர்.

லோஸ்ரெள, லாமத்தென்னுமிடங்களில் நேற்று நாலரைமணி தொடக்கம் அரைமணி நேரத்திற்கு ஜர்மனியர் பாரிய பீரங்கிகளைக் கொண்டு கடுங் குண்டுப்பிரயோகஞ் செய்தனர். ஆனால் அதனால் அதிகஞ் சேதமில்லை. சில கட்டடங்கள் சேதமுற்றன. 200 வீடுகள் அற்ப சேதமடைந்தன. 4 பேர் மாண்டனர். 3 பேர் கடுங்காயமுற்றனர். 9 பேர் அற்பகாய மடைந்தனர். யாமத் என்னுமிடத்தில் ஓர் பாரிய கட்டடம் தீவாய்ப்பட்டது. இன்னொன்று சிறிது சேதமடைந்தது.

100 வெடிகுண்டுகள் வரையில் தெய்ம்ஸ் நதியோரமாகப் பகைவராற் பெய்யப்பட்டன, யாதும் உயிர்ச்சேதமில்லை. சென்ற திங்கட்கிழமை 100 வெடிகுண்டுகள் வரையில் இங்கிலாந்தின் கிழக்கு மாகாணங்களிற் பெய்யப்பட்டன. அதனால் ஓர் உயிர்ச்சேதமும் அற்பபொருட்சேதமும் நேர்ந்தன.

மேற்குப்பகுதியிற் பிரான்சியருக்கும் ஜர்மனியருக்குமிடையில் சிறு யுத்தம் நடக்கின்றது. 304-ம் குன்றில் ஜர்மனியர் பிரான்சியருக்குரிய ஸ்தானங்கண்மீது குண்டுகளைப் பெய்தனர். மியூஸ்நதிக்குக் கிழக்கிலும் உவோவரிலும் யுத்தம் நடக்கின்றது. லோரேன், வொஸ்கஸ் என்னுமிடங்களில் ஜர்மனியர் அபஜெய மடைந்து பலர் கைதிகளாயினர்.

ஒரு பிரான்சிய செப்பிளின் கப்பல் சீபேர்க்கை யடைந்து பகைவருக்குரி ஓர் ஆகாயரதத்தைத் தாக்கியது.

பின்னரும் ருசியசைநியம் பிரான்சை யடைந்திருக்கின்றது.

சில ஆங்கில டிஸ்திரோயர்க்கப்பல்களும் வெடிகுண்டகற்றுங் கப்பல்களும் பெல்ஜிய கரையை யடைந்து கடுங் குண்டுப்பிரயோகஞ் செய்தன.

ஏப்பிரல்௴ 27௳.

ஈ 22 என்னும் ஆங்கில சப்மெறயின் கப்பல் பகைவரால் வட கடலில் அமிழ்த்தப்பட்டது. அதிலிருந்தோர் இருவர் மீட்கப்பட்டனர்.

ஒரு ஜர்மனிய ஆகாயரதம் கீழே கொண்டுவரப்பட்டு அதிலிருந்த கமனிகள் இருவரும் கொல்லப்பட்டனர். பகைவருக்குரிய வேறோர் ஆகாயரதம் வெடிகுண்டுகளைப் பெய்ததேனும் அதனால் யாதும் சேதமில்லை, லாபாசி வாய்க்காலுக்குத் தெற்கே ஆங்கில ஆகாயரதங்கள் இருமுறை சென்று தாக்கின, மூவர் கைதிகளாக்கப்பட்டனர். செனச்சசுக்குத் தெற்கே பகைவர் வெடிகுண்டுகளைப் புதைத்து ஆங்கிலருக்குரிய சில அகழ்களையும் பிடித்தனர். ஆனாற் பின்னர் துரத்தப்பட்டனர்.

அவக்கோர்ட்,பௌறிஜில் என்னுமிடங்களிற் கடும் யுத்தம்நடக்கின்றது வோக்ஸ் என்னுமிடத்தில் பகைவர் தாக்கியபோது உடனே பிரான்சியராற் றுரத்தப்பட்டனர்.

ஸ்பின்கோர்ட் காட்டில் பிரான்சியர் ஓர் ஜர்மனிய ஆகாயரதத்தைப் பிடித்தனர்.

சாம்பேனிலும் அரோக்கனிலும் பகைவர்மீது கடும்குண்டுப்பிரயோகம் நடந்தது. அவோக்கோர்ட்டிலும் கடும்யுத்தம்நடக்கின்றது லொரேனுக்கு வடக்கே ஜர்மனியர் தாக்கியபேது துரத்தப்பட்டனர். சாம்லெற்றி யென்னுமிடத்தில் ஜர்மனியர் 1000 பேர்வரையில் மாண்டனர். ஒயிசியில் ஓர்ஜர்மனியஆகாயரதம் பிரான்சியராற்பிடிக்கப்பட்டது. அதிலிருந்த இருவரும் கைதிகளாக்கப்பட்டனர். அரோக்கனில் ஓர் ஜர்மனிய ஆகாயரதத்தின்மீது பிரான்சியர் வெடிகுண்டு பிரயோகிக்க அதன்கண் தீமூண்டது. சென்ற செவ்வாய்க்கிழமை பிரான்சிய ஆகாயரதங்கள் வேர்ட்டுன், ரோய் என்னுமிடங்களில் 131வெடிகுண்டுகள் வரையில் பெய்தன. ஒரு ஜர்மனிய ஆகாயரதம் 12 வெடிகுண்டுகளைப் பெய்து இரு ஆங்கில போர்வீரரைச் சிறிது ஊறுபடுத்தியது.

ஏப்பிரல்௴ 28௳.

எர்சின்ஜானென்னுமிடத்திற் றுருக்கியர் தாக்கியபோது துரத்தப்பட்டனர்.

சென்ற 24௳ இத்தாலியர் கார்சோவிற் பிடித்த சில அகழ்களைப் பகைவர் தாக்கியபோது அதிக சேதத்துடன் துரத்தப்பட்டனர்.

பிசல் என்னும் ஆங்கில யுத்தக்கப்பல் மத்தித்தரைக்கடலில் ஓர் வெடிகுண்டில் முட்டி ஆழிவாய்ப்பட்டது 24உத்தியோகஸ்தரும்.676போர்வீரரும் மீட்கப்பட்டனர். 124 பேரைக் காணவில்லை. இது ஓர் பழைய ஆங்கில யுத்தக்கப்பல் இதன் கப்பித்தானும் அட்மிரலும் தப்பிவிட்டனர்.

கிழக்குக்கரையில் ஓர் ஜர்மனிய சப்மெறயின் கப்பல் கடலில் அமிழ்த்தப்பட்டது. ஒரு உத்தியோகஸ்தனும் 17 பேரும் கைதிகளாகப்பட்டனர்.

ஸ்ரோமனேஸ் என்னும் நோர்வே கப்பல் ஆழிவாய்ப்படுத்தப்பட்டது. அதிலிருந்தோர் மீட்கப்பட்டனர். டியூபிஹி, மாஷாவின் என்னும் இரு ஒல்லாந்த கப்பல்கள் சேதப்படுத்தப்பட்டன. எப்பிரல்௴ 25௳ அயர்லாந்தின் மேற்குக்கரையில் காாமானியாவென்னும் நார்வேக் கப்பல் ஓர் ஜர்மனிய சப்மெறயின் கப்பலால் ஆழிவாய்ப்படுத்தப்பட்டது. அதன் மாலுமியும் வேறு 9 பேரும் மீட்கப்பட்டனர்.

சீர்பேர்க்கிற் சென்ற 24௳ நிகழ்ந்த குண்டுப்பிரயோகமே இதுகாறும் நடந்த யாவற்றிலும் மிக மூர்க்கமானதென ஒல்லாந்தபத்திரிகைகள் கூறுகின்றன.

கார்னோய் என்னுமிடத்தில் பிரித்தானியர் ஜர்மனியருக்குரிய அகழ்களைத் தாக்கி அவர்களுக்கு அதிக உயிர்ச்சேதத்தை விளைத்தனர். ஜர்மனியர் பலமுறை நச்சுத்தூமத்தைப் பிரயோகித்து ஆங்கிலேயரைத் தாக்கினர். அங்ஙனம் தாக்கினரேனும் அவர்கள் ஆங்கிலேயராற் றுரத்தப்பட்டனர்.

மியூஸ்நதிக் கரையில் கடும் யுத்தம் நடக்கின்றது. வோக்ஸ் என்னுமிடத்துக்கணிதகாக ஓர் ஜாமனிய ஆகாயரதம் பிரான்சியராற் கீழே கொண்டுவரப்பட்டது. சென்ற புதன்கிழமை இரவு 3 பிரான்சியஆகாயரதங்கள் எற்றேயின், பெர்ஸ்டோர்வ் என்னுமிடங்களிலும் அருனவில் என்னுமிடத்துள்ள புகைவண்டிப்பாதையிலும் வெடிகுண்டுகளைப் பெய்தன. ஜர்மனியஸ்தானங்களிலும் சில ஆகாயரதங்கள் 28 வெடி குண்டுகளைப் பெய்தன.

டிவினிஸ்க்கில் கடும் யுத்தம் நடக்கின்றது. ஒரு ருசிய ஆகாயரதம் ஜர்மனிய சைநியங்களுடைய ஸ்தானத்திற் பல வெடிகுண்டுகளைப்பெய்தது. பாரேவிற்சி என்னுமிடத்தில் ஜர்மனியர் துரத்தப்பட்டனர். பித்திலிஸ் மலையிலிருந்து ருசியர் துருக்கியரைத் துரத்திவிட்டனர்:

வேர்டுனில் இப்பொழுது அதிக யுத்தம் நடக்கவில்லை பிரான்சிய ஆகாயரதங்கள் 4 ஜர்மனிய ஆகாயரதங்களைப் பிடித்தன. ஓர் பிரான்சிய ஆகாயரதம் உவோவரிலுள்ள புகைரதஸ்தானத்தைக் குண்டுகள் பெய்து அழித்தது.

போயிற்பற்ஸ், அசின், மியூஸ் என்னுமிடங்களில் யுத்தம் நடந்தது.

இன்டஸ்றி என்னும் ஆங்கில கப்பல் ஆழிவாய்ப்படுத்தப்பட்டது. அதிலிருந்தோர் மீட்கப்பட்டனர்.

கடிதம்.

சமய சமாதானம்.

இந்துசாதன பத்திராதிபர் அவர்களுக்கு:

ஐயா,

உலகத்துக்குச் சமாதானம் பெரிது வேண்டப்படுவதொன்று. அதனினும் சமய சமாதானம் மிக முக்கியமானதொன்று. உலகத்திலே சமாதானத்தை நாட்டவந்த கிறிஸ்துவின் நாமத்தைக்கொண்டு, இப்போது கலகத்தை உண்டாக்குதற்குச் சிலர் முந்திநிற்பது அதிகம் விசனிக்கத்தக்கது. சமய கலகங்கள் கொஞ்சக்காலத்துக்குமுன்னே இந்த யாழ்ப்பாணத்திலும் அதிகமாக நிகழ்ந்தனவேனும், பின்னர்ச் சனங்கள் எல்லாம் சமயவிஷயத்திலே விரிந்த அறிவுடையராய் வந்தமையாற்போலும் அந்தக் கலகங்கள் ஒழியலாயின. அங்ஙனம் ஒழிந்துகிடந்த கலகங்களை மீட்டும் கிளர்த்துவதற்காக ஒரு நவீன கிறிஸ்தவர் மிகப் பிரயாசப்படுகிறார், இவர் தம்மைப் பிரசித்தப்படுத்தற்கு இது ஒரு தகுந்த உபாயம் என்று எண்ணுகிறார் போலும்!

கத்தோலிக்க குருமார் எத்தனையோபேர் இந்த யாழ்ப்பாணத்திலும் பிற இடங்களிலும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் தங்கள்சமயத்தைப் போதிப்பதல்லாமல் பிற சமயங்களைத் தாக்குவதை நாம் கேள்விப்படவில்லை. "புது விளக்குமாறு நன்றாகப் பெருக்கும்" என்னும் ஆங்கில முதுமொழிக்கமைய, இவர் புதுக்கிறிஸ்தவரானமையாற் தமது சமய அபிமானத்தைக் காட்டுவதற்கு இதுவேவழி என்று எண்ணுகிறார்போலத் தோற்றுகிறது அல்லது தாம் மற்றைய குருமாரிலும் தமிழ்க்கல்வி அறிவினும் சமய அறிவினும் மேம்பட்டவர் என்பதைக் காட்டுவதற்காக இந்த வாதப்பூசலை ஆரம்பிக்க விரும்புகின்றார் போலும்! அல்லது சிலகாலத்துக்கு முந்தியிருந்த பிஸ்கிக் குருவைப்போலத் தாமுந் தம்மவருள்ளே பிரபலம் அடையக் கருதினார் என்றும் சொல்லலாம். இவர் சைவர்களோடு முரணிக்கொள்ள வெகு காலமாகப் பிரயாசப்பட்டும் சைவர்கள் அவருக்குச் சற்றும் இடங்கொடாதிருந்ததைக் கண்டபோது எனக்கு அதிகம் சந்தோஷமாய் இருந்தது ஆனால் இப்போது இவரைத் தாங்கள் தங்களுக்கோர் எதிரியாக மதித்து இவரோடு வாதந் தொடங்கியது எனக்கு அதிகம் துக்கமாக இருக்கிறது. இவர் செய்த தேவநிந்தைகளைக் கண்டு நாம் கண்மூடிக்கொண்டிருப்பது முறையல்ல என்றாலும் "சந்திரனைப் பார்த்து நாய் குரைப்பதால்" சந்திரனுக்கு ஒரு பங்கமும் வந்துவிடமாட்டாது. ஆனாலும் இவருடைய செயலால் சைவசமயிகளாகிய எங்களுக்கு ஒரு பெருநன்மை உண்டாயிருக்கிறது. சைகளுடைய சமயவிஷயங்களை எடுத்துத் தாங்கள் இப்போது விளக்குவதால், நாங்களெல்லாம் பெறுதற்கரிய பெரும்பேற்றைப் பெற்றுக்கொண்டோம். இது இவரால் விளைந்த நன்மை என்று சொல்லலாம்.

ஆனால் சமய விஷயங்களை ஆராயுமிடத்துத் தேவதூஷணம்செய்வது முறைஅல்ல என்பதை இவருக்கு இவரது சமயத்தவர்களாவது சொல்லிக்காட்டவேண்டும். ஒரு சமயக் கடவுளைத் தூஷிப்பவன் தனது சமயக் கடவுளிற் பத்தி உடையவன் என்பது பாசாங்கேயாகும். இவர் தேவதூஷணம் செய்வது மாத்திரமல்ல, வெகு சனங்களை மயக்கித் தமது சமயவலையிற் படுத்கிறார். இதனால் இவரது சமயத்துக்கே பெரியதோர் இழிவாம் என்பதை இவருடைய சமயத்தவர்களாவது இவருக்குச் சொல்லிக்காட்டவேண்டும். அறிவிற் குறைந்த சிறுபிள்ளைகளையும், பெண்களையும், வறியவர்களையும், இழிகுலத்தவர்களையும் பல உபாயங்கொண்டு மயக்கித் தமது டாப்பிற் சேர்த்துவிடுவதால், தமது சமயத்துக்கு மகிமை உண்டாமோ என்பதை இவர் சிஞ்சித்தும் சிந்திக்கின்றாரில்லை. பொருளுக்காகவும், உதவிக்காகவும், பிற சலாக்கியங்களுக்காகவும் மருண்டு இவருடைய மயக்கத்திற்பட்டவர்கள் பிறகு தங்கள் பழய சமயத்துக்குத்தானே திரும்பிவிடுதலை இவரே பலமுறை கண்டு அவர்களைத் திட்டுகிறார். இவர் அவர்களைத் திட்டுவதினும் தம்மையே திட்டிக்கொள்ளவேண்டியவர். சனங்களை மயக்குவது கஷ்டமான அலுவலல்ல. அதிலும் சமயசேவையில் ஏற்பட்டிருப்பவர்கள் சனங்களைமயக்குவது கஷ்டமான அலுவலல்ல. சமயசேவையில் ஏற்பட்டிருப்பவர்கள் சனங்களை மயக்குவது யோக்கியமாகாது என்பதை இவர் அறியமாட்டாராயினும், யோக்கியராயுள்ளஇவரதுசமயத்தவர்கள் இவருக்குச் சொல்லிக் காட்டவேண்டும். அவர்களும் இவருடைய செய்கைகளைச் சரி என்று ஒப்புக்கொண்டு மெய்ச்சுவார்களாயின், இவர்களுடைய சமயம் இப்படிப்பட்டதா என்று அறிவுடையோர் எல்லாம் பார்த்துப் பெருமூச்சுவிடுவதன்றி மற்றொன்றும் செய்யத்தக்கதல்ல.

இவரிடத்திலே பின்னும் ஒரு குணம் இருத்தலை இவருடையசமயத்தவர்கள் கவனிக்கவேண்டியது அவசியம். தன்னுடைய கண்ணிலுள்ள உத்திரத்தை எடாமல், மற்றவர்களுடைய கண்ணிலுள்ள சிராம்பைப்பற்றி வெகு கோஷ்டிபோடுகிறார். இவருடைய சமயத்திலுள்ளகுற்றங்களை எடுத்துக் காட்டினால், அந்தக் குற்றங்களுக்குச் சமாதானம் சொல்லாமல் எட்டிகுப் பூட்டியாய் எங்கள் சமயத்தில் குற்றம்பாரிக்கிறார். இது சமயபரிபாலன தருமம் ஆகாது. எங்கள் சமயத்திலே எங்கள் எங்கள் பக்குவம்பற்றி ஓர் ஒருவிஷயம் குற்றமாகவும் எமக்குத்தோன்றும். எங்கள் சமயம் காரணமாக, ஓர் ஒருகாலத்திலே, சீவர்கள் செய்துகொண்ட பழவினைப்பயனால், ஓர் ஒரு கெடுதி உண்டாவது முண்டு. கிறிஸ்து சமயத்தின்படி இப்படி ஒரு பக்குவபேதமாவது, பழவினைக் காரணமாவது இல்லாமையால் அச்சசமயத்தில் எவர் ஒருவருக்காவது ஒரு குற்றம் தோன்றவுதுகூடாது. அச்சசமயம் காரணமாக யாதொருகெடுதி உண்டாவதும்கூடாது. ஆகவே தம்முடைய சமயத்தில் எடுத்துக் காட்டப்படும் ஆட்சேபங்களுக்கு உடனுக்குடனே தகுந்த சமாதானம் சொல்லவேண்டியது இவர்மேற்பொறுத்த பெரும் பாரமாகவும் இவர் அதைப் பற்றிக் கொஞ்சமாவது சிந்தியாமல் எங்கள் சமயத்தை வாய்கொண்டமட்டும் தூஷிக்கிறார். இதை இவரது சமயிகள் கவனியாமல் விட்டால் அதுவே கிறிஸ்த சமயத்தின் நிலைக்குத் தகுந்த சாட்சியாகும். இவரது சமயத்தவர்கள் ஒருபோது இவரைத் தமிழ்க்கல்வியிலும், சைவ சமய அறிவிலும், பௌதிகசாத்திர முறையிலும் மிகத் தேர்ந்தவர் என்று எண்ணியிருக்கலாம். இவருடைய இந்த அறிவுகள் எல்லாம் "அண்ணன்கொம்பும் பட்டாபனாக்க"ப்போலானதை, இவருடைய எழுத்துக்களின் ஆபாசங்களைத் தாங்கள் வெட்டவெளியாக எடுத்துக்காட்டிய அருமையான விஷயங்களால்கண்டு இவருடைய சமயத்தவர்கள் தாம் இவரைப்பற்றி எண்ணியிருந்த எண்ணம் சரியோ என்பதை நன்றாக நிச்சயித்துக்கொள்ளலாம்.

பத்திராதிப,

தங்களை ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன்: இவர்போலியரோடு வாதஞ்செய்வதை ஒழித்து தாங்கள் எழுதிவரும் அருமையான விஷயங்களை நெடுக எழுதிக்கொண்டு வருமாறு தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சைவன்,

ஐக்கியம்.

(அச்சுவேலி "அறிவு அபிவிருத்திச்சங்கத்"தில் ஸ்ரீ. ம. வே. மகாலிங்கசிவம் அவர்கள் செய்த உபந்நியாசம்.)

(தொடர்ச்சி.)

நமதுதேசத்தில் வட்டிக்குப் பணம்கொடுத்தல் வியாபாரம்செய்தல்முதலிய முயற்சிகளில் அமர்ந்திருக்கும் நாட்டுக்கோட்டைச் செட்டிப்பிள்ளைகளைப்பற்றியுங்களுக்குத்தெரியுமல்லவா? அவர்கள் தாராளமாகப்பணத்தைக்கொட்டி, தருமவிஷயங்களிற் செலவழித்திருப்பதுண்மையானாலும் கொடுக்கல் வாங்கல்களில் மிக அழுத்தமுள்ளவர்கள். அரைச் சதத்தையும் விடமாட்டார்கள். இவர்களுக்கிடையில் நடக்கும் வழக்குகள் ஒவ்வொன்றையும் இவர்களுடைய பணத்தைப் போக்கவந்த ஒவ்வொரு பாபக் கிரகமென்றே சொல்லவேண்டும். இவர்களில் இரு செட்டிப்பிள்ளைகள் ஒரு மாங்காய் சம்பந்தமாக உற்பத்தியான வழக்கிற்காகத் தலைக்கு ஐயாயிரம் பவுண் கொட்டிச் செலவழித்தார்களாம்? இப்படியே பெரும்பகுதியான வழக்குகள் முடிகின்றன. எங்கள் ஊரில் இரு வயற்காரர் தங்கள் எல்லைவரம்பு சற்றே கூடிக் குறைந்தது என்று மாறுபட்டுக் கோட்டிற்குப்போய்ச் செலவழித்த ரூபா தலைக்கு நான்கு ஐந்து பரப்பு வாங்கப் போதியது என்று சொன்னார்கள். எனதுநண்பரொருவர்கூறியவாறு, இரண்டுபேர் இந்தப் பசு என்னுடையது என்னுடையது என்று வாலையுந் தலையையும் பிடித்திழுக்க அதின்பாலை வேறொருவன் மெதுவாகக் கறந்து கொண்டு போவதுபோலவே நீங்கள் வழக்குச் சென்றுகோட்டிற்குப்போகத் தரணிமார் உங்கள் பணத்தை அடித்துக்கொண்டு போய்விடுகிறார்கள். நெல்லுப்பயிருடன்முளைத்த களைப்புல்லுப்போல நமது நாட்டிற்குப் பாரமாய்ப் பிறந்த சில புண்ணியவான்கள் தங்கள் பணமெல்லாவற்றையும் வழக்கிற் செலவழித்துப் பாழாக்கித் தாங்கள் கெட்டுப்போயிருக்க மற்றவர்கள் நல்லாயிருக்கிறதோ என்று மனம் புழுங்கி ஊரவர்களுக்கிடையிற் கோள்மூட்டிப் பகையுண்டாக்கி வழக்கிற்கேவிவிட்டு வேடிக்கை பார்க்கிறார்கள்.

சபையார்களே, கல்வியறிவற்ற மூடர்களுக்குள் உண்டாவதுபோலக் கற்ற அறிவாளிகளுக்குள் வழக்கு அதிகமாக உண்டாகக் காணோம். விரோதிகளான இருவருக்குள் உண்டாவது போல வழக்கு நண்பர்களான இருவருக்குள் உண்டாகக் காணோம். அகங்காரம், பொறாமை, பொருளாசை முதலிய துர்க்குணங்களுள்ளவர்களுக்குள் உண்டாவதுபோல வழக்குத் தாழ்மையான குணம், பிறர்நன்மைகண்டு மகிழுதல், பிறர்பொருள் விரும்பாமை முதலிய சற்குணங்களுள்ளவர்களுக்கிடையில் உண்டாகக் காணோம். கொலை, களவு, வியபிசாரம், பொய்முதலான துர்ச்செய்கையுள்ள துன்மார்க்கர்களுக்குள் உண்டாவது போல வழக்குக் கொல்லாமை, களவெடாமை, வியபிசாரஞ் செய்யாமை முதலிய நற்குணம்வாய்ந்த சன்மார்க்கர்களுக்கிடையில் உண்டாகக் காணோம். அந்நியர்களுக்கிடையில் உண்டாவது போல வழக்கு ஒற்றுமையுள்ள சகோதரர்களுக்கிடையில் உண்டாகக் காணோம். கவண்மென்ற் உத்தியோகஸ்தர்களிடத்திலே அடியோடு கிறிமினல் வழக்குகள் உண்டாகக் காணோம்.

சபையோர்களே, வழக்குப் பெரும்பாலும் எவர்களுக்கிடையில் உண்டாகின்றது, எவர்களுக்கிடையில் உண்டாகவில்லையென்று நான் இதுவே உங்களுக்குச் சுருக்கமாக எடுத்துக்காட்டியதைக் கவனிப்பீர்களானால் அதிலிருந்து வழக்குகள் உண்டாகாதபடி தடுக்கும் உபாயங்களை அனுட்டானத்திற் கொண்டுவர முடியும். நான் கூறியதிலிருந்துஜனங்களிடத்துக்கல்வியறிவில்லாமையும், ஒற்றுமைக்குறைவும், குடிவெறியும், துன்மார்க்கமும், பொருளாசை, பொறாமை முதலிய துர்க்குணங்களுமே தேசத்தில் வழக்குகள் அதிகமாக உண்டாவதற்குக் காரணங்களாயிருக்கின்றன என்று விளங்கலாம். நண்பர்களுக்கிடையில் வழக்குண்டாகாதவாறுபோல, சகோதரர்களுக்கிடையில் வழக்குண்டாகாதவாறு போல, உங்களூரவர்களெல்லாம் ஒருவருக்கொருவர் நண்பர்களாகவும், ஒருவருக்கொருவர் சகோதரர்போலவும் இருப்பீர்களேயானால் அவர்களுக்கிடையில் வழக்குகள் உண்டாகா வென்று விளங்குகின்றதல்லவா? ஊரை வேருடன் கெடுக்கும் வழக்குகளெல்லாம் ஒற்றுமைக்குறைவினால் உண்டாவதினால்தான் ஒற்றுமையைப்பற்றிப் பேசவந்த இடத்தில் வழக்கின் சங்கதியை இவ்வளவுதூரம் விஸ்தாரமாகப் பேசினேன்.

அறிவிற்சிறந்த பெரியோர்களே, சீர்திருத்தத்தில் உற்சாகம் மிகுந்த வாலிப ரத்தினங்களே, தேசாபிமானம் என்னும் நுகத்தைத் தோளில் வைத்துக்கொண்டு எல்லாரும் ஐக்கியப்படுங்கள், ஐக்கியப்படுங்கள். உங்கள் தேசமாதா தன் தொண்டுபுரியும்படி உங்களை அழைப்பது உங்கள் காதில் விழவில்லையா? உங்கள் தேசமாதா தன் பிள்ளைகள் ஒருவரும் தன்னை ஆதரிக்கவில்லையே என்று புலம்பும்ஓசை உங்கள் காதுகளிற்படவில்லையா? உங்கள் தேசமாதா தன்பிள்ளைகளில் மூத்தவர்கள் கல்வி செல்வம் முதலியவற்றில் மேம்பட்டுப் பெண்டு பிள்ளைகளுடன் உண்டுடுத்துத் தங்கள் சுகத்தைமாத்திரம் கவனித்துக்கொண்டு இளைய சகோதரர்கள் கல்வியற்ற மூடர்களாயும் செல்வமற்ற ஏழைகளாயும்கிடந்துதயங்க அவர்களைக் கவனியாமல் தங்கள்பாட்டில் இருக்கின்றார்களே என்று மனம் வருந்தியழுத கண்ணீர் உங்கள் நெஞ்சைப் பிழக்கவில்லையா? வாலிபர்களே, துன்மார்க்கமாகிய வெய்யிற் சுட அதனாலே உங்கள் தேசமாதா நாவரண்டு தாகம் மிகுந்து தண்ணீர்தண்ணீரென்கின்றாள். உங்கள வாலிப ரத்தத்துடன் கலந்து பாயும் தேசாபிமானத்தையும் உற்சாகத்தையும் நெஞ்சிற் குத்தி ஒழுகவிட்டு உங்கள் தேசமாதாவிற்குக் கொடுத்து அவளுடைய தாகத்தைத் தீருங்கள். அப்பொழுதல்லவோ நீங்கள் உங்கள் தேச மாதாவின் உண்மைப்புத்திரராவீர்கள். வாலிபர்களே, உங்கள்கோழைத்தனத்தைத் தூர வீசுங்கள், உங்கள் தேசநன்மையின்பொருட்டுச் செய்யவேண்டிய சீர்திருத்தங்களைச் செய்வதற்கு முன்வாருங்கள். உங்கள் வாலிபத்தத்தைப் பழுதாக்குவதற்கு எங்கேயென்று தேடிக்கொண்டிருக்கும் சோம்பல், தற்பெருமை, வீணாடம்பரம்முதலிய துஷ்ட கிருமிகளைச் சுட்டெரித்து விடுங்கள்.

(தொடரும்.)

விளம்பரம்.

ஓடுகளும் சீமெந்தும்.

பெருந் தொகையான ஓட்டு மார்க்குச் சீமெந்தும், பேர்பெற்ற மங்களூர் ஓடுகளும், இரட்டை யானை மார்க்கு ஓடுகளும் விலைக்கிருக்கின்றன. வந்து பாருங்கள்.

யோசேப் அன் கம்பெனி,
தேவரீர்க் குளத்துக்கு முற்பக்கம்,
யாழ்ப்பாணம்.

விளம்பரம்.

அனுராசபுரம், மிகிந்தலை, மருதங்கடவலை முதலிய பகிரங்கவேலைப்பகுதிகளுக்குத் தேவையான செங்கற்கள், சுண்ணாம்பு, ஓடுகள், இடுகுகள், பாய்கள் முதலிய சாமான்களை 1916-ம் ௵ அக்டோபர்மீ 1௳ தொடக்கம் ஒன்று இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்குக் கொடுப்பதற்கு ஒப்பந்தக் கேள்விக்கடுதாசிகள் ஒப்பந்த விசாரணைச் சங்கத் தலைவரால் அரசிறை வருமானத் தலைவர்கந்தோரில் 1916-ம் ௵ மேமீ 9௳ செவ்வாய்க்கிழமை மத்தியானம் 12 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் தேவையான வேறு விபரங்கள் அரசாட்சியாரது கசற் பத்திரிகையிற் காணலாம். அல்லது அந்த மாகாண பிரதான இஞ்சினீருக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

காரைதீவு மேற்குக்குடி கந்தவேலுப்பிள்ளை பெண் வள்ளியம்மையாகிய நான் இதைக்கொண்டு சகலருக்குமறிவிப்பது என்னவென்றால் காரைதீவு மேற்கு இறைகும்பரப்புலம என்னும் பனந்தோட்டம் என்னுடைய சீதனப் பணத்திலிருந்து கொள்ளப்பட்டது. ஆனால் காணியுறுதி எனது புருஷன் கதிர் வேலுப்பிள்ளை பேருக்கு முடிந்தது, இப்போது கொஞ்சக்காலமாய அவரும் நானும் பிரிந்திருக்கிறோம். அவர் இந்தக்காணியைபிறருக்கு விற்க விலைபேசுகிறாரென்று நான் அறிகிறபடியால் குறித்தகாணியைஒருவருங் கொள்ளப் படாதென்றும் யாதொரு கொத்தாரிசும் குறித்த காணியைப்பற்றி ஒரு உறுதியுமெழுதப் படாதென்றும் இத்தால் விளம்பரபபடுத்துகிறேன்.

3-5-16 வள்ளியம்மை கைக்கீறு.

விளம்பரம்.

பனார்ஸ் பட்டுச்சேலை.

1. சிகப்பு, ரோஸ், பச்சை, புளு, ஊதா, வெளார்ரோஸ், வெளார்பச்சை, லைட்புளு, பின்கசலர் இன்னும் பலமாதிரி நிறங்களில் உடல் பூராவும் பட்டில் பலவித பூ கொடி வேலைகள் செய்த சரிகை பனார்ஸ் கரை பனார்ஸ் முந்தி 16 முழம் சேலை ரூ 23 முதல் 25 வரை.

2. மேற்படிகரையில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்ட 16 முழம் சேலை ரூ 30 முதல் 35 வரை.

3. மேற்படி சரிகை பனார்ஸ்கரை உடல் பூராவும் சரிகைமத்தாப்பு பெரிய கொட்டடி 16 முழம் சேலை ரூ 35 முதல் 40 வரை.

4. மேற்படி உடலில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்டது 16 முழம் சேலை ரூ 40 முதல் 45 வரை.

5. மேற்படி சரிகை பனார்ஸ்கரை உடல பூராவும் சரிகைமத்தாப்பு சன்னக் கொட்டடி 16 முழம் சேலை ரூ 45 முதல் 50 வரை.

6. மேற்படி உடலில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்டது 16 முழம் சேலை ரூ 50 முதல் 55 வரை.

7. மேற்படிசரிகை பனார்ஸ்கரையில் உடல் பூராவும் சரிகை நக்ஷத்திர புட்டா போட்ட 16 முழம் சேலை ரூ 45 முதல் 50 வரை.

8. மேற்படி நிறம் சரிகை மத்தாப்புக்கரையில் மத்தாப்பு முந்திபோட்ட 16 முழம் சேலை ரூ 30 முதல் 35 வரை.

9. மேற்படி நிறம் சரிகை மத்தாப்புக்கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்ட 16 முழம் சேலை ரூ 35 முதல் 40 வரை.

10. மேற்படி மத்தாப்பு சரிகை கரையில் உடல் பூராவும் சன்னமாக மத்தாப்பு சரிகை கொட்டடி 16 முழம் சேலை ரூ 55 முதல் 60 வரை.

11. மேற்படி கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்ட 16 முழம் சேலை ரூ 60 முதல் 65 வரை.

12. மேற்படி சாதா பனார்ஸ்கரையில் உடல் பூராவும் நெருக்கு ஊசி வாணம் மத்தாப்பு சரிகை கொட்டடி 16 முழம் சேலை ரூ 75 முதல் 80 வரை.

சகாயவிலை! சகாயவிலை!!

கல்யாண பட்டுச் ஜவுளிகள்.

இந்தியர்களால் தயார் செய்யப்பட்டது.

நம்பிக்கையும் நாணயமும் நயமுமுள்ள தினுசுகள்.

குறிப்பு.

மதுரையிலிருக்கும், மு. க. ராமய்யர் அன்சன்ஸ் ஜவுளி கம்பனியென்றால் உலகம் பூராவும் நன்றாய் அறிவார்கள். அனுபவம் பெற்றுத் தேர்ந்த நெசவுகாரர்களால் தயார்செய்து வருகின்ற விசேஷமான ஜவுளித் தினுசுகள்.

பாவிப்புக்கும் சலவைக்கும் பரிசுத்தமாகவும், அலாம்பரமாகவும் விளங்கும்படியான மிகவும் உயர்ந்த சரிகை, சாயம், பட்டு நூல்களில் தயார் செய்யப்படுகின்றது.

ஒருமுறை எங்கள் கம்பேனி ஜவுளிகளைப் பாவித்தவர்கள் எப்போதும் எங்கள் ஜவுளிகளை உபயோகிக்க மனமுள்ளவர்களாயிருப்பார்கள்.

கல்யாணச்சடங்கு முதலிய விசேஷகாலத்தில் உபயோகிக்கும்படியான மேன்மைபெற்ற பட்டுச் ஜவுளிகளும் சாதாரணமாக எப்போதும் பாவிக்கக்கூடிய பலமாதிரி நூதன ஜவுளிகளும் ஏராளமாய்த் தயார்செய்யப்படுகின்றது. கொழும்பு, கண்டி, காலி, மட்டக்களப்பு, திரிகோணமலை, யாழ்ப்பாணம் ரெங்கூன, பினாங்கு, சிங்கப்பூர், கோலாம்பூர்முதலிய அனேக இடங்களிலிருக்கும் வியாபாரிகளுக்கும், கம்மிஷன் ஏசண்டுகளுக்கும சொந்தப்பாவிப்புக்காரர்களுக்கும உத்தியோகஸ்தர்களுக்கும் பிரபுக்களுக்கும் தோட்டதுக் கங்காணி கணக்கப்பிள்ளை கண்டக்டர் முதலிய யாவர்களுக்கும் எங்கள் கம்பேனி ஜவுளிகள் ஏராளமாய் அனுப்புகிறோம.

இதுவரையிலும் எங்கள் கம்பேனியில் ஜவுளிகள் வாங்கி வருகின்றவர்களும் இனிமேல் வாங்குகிறவர்களும் அவரவர்கள் வளவிலும் அவரவர்கள் சொந்தக்காரர்கள் வளவிலும் சிநேகிதர்கள் வளவிலும் இப்போது நடக்கப்போகிற கல்யாணச் சடங்குகளுக்கும் முக்கியமாய்த் தேவையான கூறைப்புடவைகளும், நவுக்கைகளும், சால்வைவேட்டிகளும், இன்னும் பலமாதிரித் தினுசுகளுக்கும் முன்னுடியே எங்கள் கம்பேனிக்கு ஆர்டர்கொடுத்து விருப்பமுள்ள தினுசுகள் பெற்றுக்கொண்டு பெரும் லாபமும் நயமும அடையவேண்டியது.

சில கூறைப் புடவைகளின் விலைகளும் தினுசுகளின் விபரமும் இதில் தெரிவித்திருக்கிறது மற்றத் தினுசுகளின் விபரங்கள் தெரிந்துகொள்ளவேண்டியவர்கள் கடிதமூலமாக விலாசந் தெரிவித்தால் கேட்லாக் இனாமாக அனுப்பக்கூடும.

வியாபாரிகளுக்கு மொத்தமாகவும சில்லறையாகவும் சகாயவிலைக்குத் தேவையுள்ள தினுசுகள் அனுப்பக்கூடும.

இலங்கை, பர்மா, சிங்கப்பூர, பினாங்கு முதலிய இடங்களுக்குச் ஜவுளிகள் தபால் வி பி பார்சலாக அனுப்பக்கூடும.

F. M. S. சைசேர்ந்த கோலாலம்பூர் முதலிய இடங்களுக்குச் ஜவுளிகள் பாங்குமூலமாய் அனுப்பக்கூடும்.

முக்கிய கவனிப்பு.

தேவையான நிறங்களும், விலையும், நம்பருங்கண்டு விபரமாய் எழுதவேண்டியது.

(தொடர்ச்சி.)

13. மேற்படி கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்டு மேற்படி உடல்சரிகைகொட்டடி 16 முழம் சேலை ரூ 80 முதல் 85 வரை.

14. மேற்படி கரையில் ரெட்டைக்கரையாகவும் கரைக்குக் கொடிபேட்டுகள் வைத்த உடல்சரிகைகொட்டடி 16முழம் சேலை ரூ 85 முதல் 90 வரை

15. மேற்படிமாதிரிக் கரையில் உடல் பூராவும் சரிகை ரெட்டைக்கொட்டடி நெருக்கு ஊசி வாணக்கொட்டடி 16 முழம் சேலை ரூ 100 முதல் 120 வரை.

16 மேற்படி கரையில் உடல் பூராவும் சரிகைஜோட்டபளிவாணத்தார் கொட்டடி 16 முழம்சேலை ரூ 120 முதல் 150 வ.

17. மேற்படி ஒற்ற பனார்ஸ் கரையில் உடல் சரிகை கொட்டடியில்சரிகை புட்டா சேலை ரூ 75 முதல் 80 வரை.

18. மேற்படிமாதிரிஉடலில் கரைக்கு ரெட்டைக் கரையாகவும் கொடிபேட்டுகள் வைத்த சேலை ரூ 100 முதல் 120 வரை.

19. காஸ்மீர பட்டில் உடல சாதா கரைக்கும் முந்திக்கும் சரிகைவேலை செய்த ரோஸ், சிகப்பு, பச்சை, ஊதா நிறமுள்ள சேலை ரூ 20 முதல் 25 வரை.

20. மேற்படி உடல் சரிகை புட்டா சேலை ரூ 27 முதல 35 வரை.

(கொர் நாட்டுப் புடவை.)

21. மேற்படிநிறங்களில் உடல் சாதா முந்தி சரிகைவேலை மானம் சேலை ரூ 17 முதல் 20 வரை.

22. மேற்படி சரிகை ருத்திராக்ஷக் கரைச் சேலை ரூ 20 முதல் 25 வரை.

23. மேற்படி சாதாக்கரையில் உடல் சரிகைகொட்டடிசேலை ரூ 25 முதல் 30 வ.

24. மேற்படி சரிகை ருத்திராக்ஷக் கரையில் உடல் சரிகை கொட்டடி சேலை ரூ 35 முதல் 40 வரை.

25. உடல் மஞ்சள் நிறம் ஜோட்டு பப்ளி, வைடூரிய பப்ளி, கூறை முகி சேலை ரூ 15 முதல் 25 வரை.

26. மேற்படி சுத்தப்பட்டு நயம் கொட்டடிசாயச்சேலை ரூ 25முதல் 30 வரை.

27. மேற்படி சரைக்கும் முந்திக்கும் சரிகைபோட்டசேலை ரூ 30மு. 35 வரை.

மு. க. ராமய்யர் அன்சன்ஸ், மேலக்கோபுரவாசல்,
போஸ்ட் நம்பர் 48 மதுரை, தென் இந்தியா.

M. K. Ramier and Sons. West Tower St.
Post No. 48 Madura, South India.

வான்முகில்வழாதுபெய்கமலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறையரசுசெய்ககுறைவிலாதுயிர்கள்வாழ்க, நான்மறையறங்களோங்குகநற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்சைவநீதிவிளங்குகவுலகமெல்லாம்.

☞ Printed and published by S. KandiahPillai, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.